
உ

சிவமயம்

தேவகோட்டை
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர்
திருக்கோயில் தல வரலாறும், வழிபாடும்

நகரச் சிவன் கோவில், தேவகோட்டை - 630 302.



ஹேவிளம்பி வருடம் பங்குனி மாதம் 16-ஆம் நாள்

30-03-2018 அன்று நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தின் போது வெளியிட்டு வழங்கப்பட்டது

முல்லை பதிப்பகம்

தேவகோட்டை
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்
தல வரலாறும் வழிபாடும்

(நகரச் சிவன்கோயில், தேவகோட்டை)

ஆசிரியர்
பா. தியாகராசன் எம்.ஏ., பி.எட்.,
தேவகோட்டை

நெறியாளர்
டாக்டர் தே. சொக்கலிங்கம்

மேற்பார்வை
டாக்டர் சபா. அருணாசலம்

வெளியிட்டு வழங்குபவர்கள்:
முல்லை **மு. பழநியப்பன்**
முல்லை **மு. ராமநாதன்**
முல்லை **மு. கருப்பையா**

323/10, கதிரவன்காலனி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை–40.
செல்: 9840358301.
e-mail: mullaipathipagam@yahoo.com

"முல்லை இல்லம்" 18A, மாயாண்டிச் செட்டியார் தெரு,
தேவகோட்டை – 630 302.

முதற்பதிப்பு:1998 வசந்தா பிரசுரம், சித.சா.தெ.சாமிநாதன்
இரண்டாம் பதிப்பு: மார்ச் 2018
விலை : ₹25/-

ஹேவிளம்பி வருடம் பங்குனி மாதம் 16ஆம் நாள்
30.03.2018 அன்று நடைபெற்ற
மஹா கும்பாபிஷேகத்தின்போது
வெளியிட்டு வழங்கப்பட்டது

அச்சும் அமைப்பும்:

முல்லை பதிப்பகம்
323/10, கதிரவன்காலனி, அண்ணாநகர் மேற்கு
சென்னை 40, செல்.:9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

அணிந்துரை

டாக்டர் சபா.அருணாசலம்

சீர்வளரும் தேவகோட்டை ஓங்கும் நல்ல
சிவன்கோவில் வரலாற்றை ஆராய்ந்தார் தம்பி
பேர்விளங்கு தியாகராசன் முயற்சி மிக்கார்
பேரறிவு பணிவன்பு செல்வம் கொண்டார்
ஊர்விளங்கு வரலாற்றைக் கோவில் தன்னை
உருவாக்கிக் கொண்டாடும் மாண்பு தன்னைத்
தேர்விளங்கு தோற்றம்போல் நூலாய்த் தந்தார்
'தியாகராசன் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

தேவாரம் ஓதுகிற மரபில் வந்தார்
திகழ்கோயில் பேணுகிற மரபில் வந்தார்
நாவாரச் சுந்தரேசர் மீனாட்சி யம்மை
நற்புகழை நூலாக்கித் தந்தார் வாழ்க
ஆவாரம் பூப்போல அறிவில் புகழில்
அனைவரையும் கவர்ந்து நீ வாழ்க வாழ்க
பாவாரம் தமிழ்வாழும் காலம் எல்லாம்
படிக்கும் உன் நூல்வாழ! வாழ்க வாழ்க!

1998

டாக்டர் தே.சொக்கலிங்கம்
எம்.ஏ., பி.ஓ.எல். பி.எச்.டி.,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி-3

அணிந்துரை

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் நலம் பல பெற்று மிகுதியாக வாழும் ஊர் தேவகோட்டை. பாடல் பெற்ற திருத்தலங்களுக்குத் திருப்பணி செய்த திருப்பணிச் செல்வர் மிகுந்த ஊரும் இவ்வூரே. சைவமும் தமிழும் தங்களின் இருகண்கள் என்று போற்றுகின்ற நகரத்தார்கள், தாங்கள் வாழ்ந்த ஊர்களில் எல்லாம் திருக்கோயில்கள் கட்டித் தெய்வ பக்தியை வளர்த்தனர். செட்டிநாட்டில் கட்டப்பெற்ற சிறந்த கோயில்களில் தேவகோட்டை நகரச் சிவன் கோயிலும் ஒன்றாகும். இக்கோயிலின் வரலாற்றையும் வழிபாட்டு மரபுகளையும் விழாச் சிறப்புகளையும் திரு பா.தியாகராசன் அவர்கள் அரிதின் முயன்று தேடிச் செவ்வனே எழுதியுள்ளார்கள்.

திரு பா.தியாகராசன் கோயிற்கலைகளைப் பற்றி நன்குகற்று அறிந்தவர்; தளரா முயற்சியும் சான்றோரை அணுகிப் பணிவோடு ஆலோசனை கேட்கும் பண்பும் வாய்ந்தவர். திருமுறைச் செல்வர் ஆறுமுக தேசிகரின் பெயரர்; வழிவழி வந்த தமிழுணர்வும் தெய்வப் பற்றும் நூலாசிரியரின் குருதியில் கலந்தவை. அன்போடும் அக்கறையோடும் பண்போடும் பணிவோடும் கோயில் தொடர்பான கருத்துகளைத் திரட்டி மிக எளிய தமிழில் - இனிய நடையில் - ஆசிரியர் இந்நூலை உருவாக்கியிருக்கிறார்.

ஒவ்வொரு ஊரைப் பற்றியும், ஊரிலுள்ள கோயில் களைப் பற்றியும், தெளிவான மெய் வரலாறு எழுதப்பெற

வேண்டும். இத்தகைய வட்டார வரலாற்று நூல்கள் தோன்றினால்தான் உண்மையான - முழுமையான - நாட்டு வரலாறு - மக்கள் வரலாறு - இலக்கிய வரலாறு தோன்ற சீரிய அடிப்படை அமையும். வன்தொண்டர் சேக்கிழார் கோயில் கட்ட வாங்கிய நிலப்பகுதி, சிவன் கோயில் கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டது என்று ஆசிரியர் சொல்லும்போது, வன்தொண்டச் செட்டியாரைக் கண்டு பேசி மகிழ அவர் காலத்தில் நாம் வாழ்ந்திலேமே என்று நெஞ்சம் வருந்துகின்றது. அப்பெரியார் சேக்கிழார் பாலும் சிவபெருமான் பாலும் கொண்ட அன்பின் திறம் என்னே!

காலத்தில் கரந்துவிட்ட பல செய்திகளுக்கு பா.தியாகரராசன் உயிர் கொடுத்துண்மையை வாழ வைத்திருக்கிறார்; அவருடைய முயற்சிக்குத் துணை நின்ற ஆன்றோர் பலர்; தியாகராசனுடைய பணிவுச் செல்வம் அவருக்கு எதிர்காலத்தில் வளமான வாழ்வை நல்குவதாக!

தே. சொக்கலிங்கம்

காரைக்குடி.
6.4.1998.

முன்னுரை

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்

எல்லாக் காலத்தும் எல்லாமுமாகவும், எங்கும் நிறைந்திருக்கின்றவனுமாகிய, முழுமுதற்பொருளான சிவபெருமானை வணங்கி முன்னுரையை எழுதுகிறேன்.

வன்தொண்டர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்ற தெய்வத் தமிழ் நலம் பெற்ற ஆன்றோர்கள் வணங்கிப் போற்றிப் புகழ்பெற்ற திருக்கோயில் தேவகோட்டை நகரச் சிவன் கோயில். இக்கோயிலின் வரலாறு, பூசை மரபு, திருவிழாச் சிறப்பு, அமைப்பு போன்றவற்றை ஆராய்ந்து இச்சிறுநூல் விளக்குகிறது. இதனைப் பல நூறு பக்கங்களாக விரித்தெழுத வாய்ப்புண்டு. இது என் கன்னி முயற்சி. கோயிற்கலை பயின்ற வாய்ப்பு இதனைத் தெளிவாக உருவாக்கத் துணை நின்றது.

இந்நூலினை இலவசமாக வெளியிட்டு உதவிய பதிப்பகத்தாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள். இந்நூலாக்கத்திற்கு ஊக்கம் தந்து வேண்டிய போதெல்லாம் நன்முகம் காட்டி ஒல்லும் வகையான் உதவிய சிவஸ்ரீ பட்டுச்சிவாச்சாரி அவர்களை நன்றியோடு எண்ணி அவர் திருவடிகளை வணங்குகிறேன். இந்நூலின் பெருமையெல்லாம் வணக்கத்திற்குரிய சிவத்திரு பட்டுச்சிவாச்சாரியார் அவர்களுக்கே உரியது. பூசை மரபுகள், திருவிழாக்களைப் பற்றி செய்திகள் தந்து உதவிய சிவத்திரு ஆ.இராமு கனபாடிகள் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகள். இந்நூலுக்குரிய அடிப்படையான செய்திகளைத் தந்துதவிய கரு.கி.க.சொ.சொர்ணலிங்கம் செட்டியார் அவர்களுக்கும் என்நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினைக் கையெழுத்து வடிவிலேயே சரி பார்த்தும், இந்நூல் அமைய உதவிய, 1989-இல் நடைபெற்ற கும்பாபிடேக நூலையும் மற்றும் சேக்கிழார் விழா நினைவுகள் என்ற நூலையும் கொடுத்துதவிய உயர்திரு டாக்டர் சபா. அருணாசலம் அவர்களுக்கு என் இனிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோயிலை ஆய்வு செய்ய அனுமதித்த கோயில் நிருவாகத்தாருக்கும் எனது அன்பார்ர்ந்த நன்றி.

எனது ஆய்விற்கு பெரிதும் உதவிய எனது நெறியாளரும், நகரத்தார் வரலாறு பற்றி பல ஆய்வு நூல்கள் வெளியிட்டவருமான உயர்திரு டாக்டர் தே.சொக்கலிங்கம் அவர்களுக்கு எனது நன்றியும், பணிவான வணக்கங்களும் உரித்தாகும். அய்யா அவர்களின் அணிந்துரை இந்நூலினை அழகு செய்கிறது.

என்னை ஆளாக்கிய எனது பெற்றோர் திருவடிகளையும், என் வாழ்வின் வழிகாட்டி உயர்திரு கவிஞர் டாக்டர். அர.சிங்காரவடிவேலனவர்களின் திருவடிகளையும் பணிவோடு வணங்குகிறேன்.

தேவகோட்டைச் செல்லப்பச் செட்டியார் சிவன் கோயிலில் தேவாரம் இசைக்க வந்த எந்தையார் தந்தை சிவஸ்ரீ ஆறுமுகதேசிகர் அவர்கள் காலந்தொட்டு எங்களுக்கும், தேவகோட்டைக்கும் தொடர்புண்டானது. எனவே இம்மலரை இவ்வூர்க்கடவுளர்க்கும், எங்களுக்கு இடமளித்த நல்லூர் தேவைப்பதிக்கும், இவ்வூர் மக்களுக்கும் காணிக்கை ஆக்குகிறேன்.

வாழ்க வளமுடன்

தேவகோட்டை **பா. தியாகராசன்**
2.4.1998.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் தல வரலாறும் வழிபாடும்

நகரச் சிவன்கோயில், தேவகோட்டை

தெய்வநலம் மிக்க தேவகோட்டை

சிவனடியே சிந்திக்கும் சீரார் செல்வர்
அவனடியே வந்திக்கும் ஆராத அன்பர்

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்; அப்பெருமக்கள் வாழுகின்ற திருநெறியாம் சைவம் தழைத்த திருப்பதி தேவைப்பதி; இதனை மக்கள் தேவகோட்டை என்று போற்றுவர். தொடுக்கும் பழம் பாடல் தொடையின் பயனாகிய அன்னை ஸ்ரீ மீனாட்சியும், ஸ்ரீ சுந்தரேசுவரப் பெருமானும் எழுந்தருளி அருளாட்சி புரிகின்ற திருப்பதி தேவகோட்டை. தேவகோட்டை நகரின் திருவாழ்வுக்கும், பெருவாழ்வுக்கும் காரணமாய் அருள் பாலித்து அமைவது இங்கு எழுந்தருளிய தெய்வ மூர்த்தங்களும், தெய்வ சாந்நித்தியமும்தான் என்பது உறுதி.

சேக்கிழாரைப் போற்றிய வன்தொண்டர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்றைய தேவகோட்டைக்கு வடகிழக்கில் - ஈசானிய மூலையில் - திருக்கோயில் எழுப்பப்பெற்றுள்ளது. இன்று சிவன்கோயில் அமைந்திருக்கும் இப்பகுதி, திருத்தொண்டர் புராணம் அருளிய சேக்கிழார் பெருமானுக்குக் கோயில் கட்டுவதற்காகத் தமிழ்ப் பெரியார் வன்தொண்டர் வாங்கிய இடமாகும். வன்தொண்டர் நாராயணன் செட்டியார் இலுப்பைக்குடிக் கோயிலைச் சேர்ந்தவர். இளமையில் அம்மை நோய் தாக்கியமையால், இருகண் பார்வையையும் இழந்தவர். தமிழ்கற்ற தலைசிறந்த புலவர். நாள்தோறும்

ஆறுமுறை திருமுருகாற்றுப் படையை ஓதும் வழக்கத்தை விடாது பின்பற்றியவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடன் நெருங்கிய உறவு கொண்டு அவரிடம் பல நூல்களைப் பாடங்கேட்டவர். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைச் செட்டிநாட்டுக்கு அழைத்துப் பல புராணங்களைப் பாடச் செய்தவர். வன்தொண்டரே. இவ்வாறு சைவப்பற்றும், தமிழ்ப்பற்றும் மிக்க இப்பெரியார் அடக்கமும் அமைதியும் மிக்கவர்.

பெரிய புராணப் பேரீடுபாடு

வன்தொண்டர் நாராயணன் செட்டியார் திருத்தொண்டர் புராணத்தை ஐயந்திரிபறக் கற்றவர். எனவே, சேக்கிழாரின் புலமையைப் போற்றும் வண்ணம் அவர் மீது ஒரு பிள்ளைத் தமிழ் நூலை இயற்றித் தருமாறு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை வன்தொண்டர் வேண்டினார். அவரும் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்னும் செந்தமிழ்க் கனியை ஆக்கி வன்தொண்டர் ஆசையை நிறைவேற்றினார்.

சாலச் சிறந்த சிவனடியாராக சேக்கிழார் மீது வன்தொண்டர் கொண்ட பற்றுக்கு அளவில்லை. அதனால் சேக்கிழாரைக் கோயில் கட்டி எழுந்தருளச் செய்து வழிபட வேண்டும் என்ற விழைவால் சேக்கிழார் கோயில் கட்ட அவர் தேவகோட்டையில் இடம் வாங்கினார். அக்காலத்துத் தேவகோட்டையில் சிவன் கோயில் கிடையாது.

சேக்கிழார் மனையிடம் சிவன் மனையாதல்

நகரத்தார்கள் வாழும் ஊரைச் சார்ந்த பகுதியில் சிவன் கோயில் இருந்தால், தங்களூரில் தனியே ஒரு சிவன் கோயிலை நகரத்தார்கள் புதிதாகக் கட்டுவதில்லை; இராங்கியம், விரையாச் சிலை போன்ற ஊர்களில் இன்றும் தனியே சிவன் கோயில்கள் இல்லை. தேவகோட்டையைச் சார்ந்து கண்டதேவி, இறகுசேரி போன்ற இடங்களில் சிவன்கோயில்கள் இருந்தமையால் புதிய சிவன் கோயில் தேவகோட்டையில் உருவாகவில்லை. தேவகோட்டை நகரத்தார்கள் பழைய சிவன் கோயிலையே வழிபட்டு வந்தனர்.

வன்தொண்டர், தேவகோட்டை ஊருக்கு வடகிழக்கே சேக்கிழாருக்குக் கோயில் கட்டத் திட்டமிட்டு இடம் வாங்கியிருந்தார். கோயில் உருவாவதற்கு முன்பே கோயிலில் ஒலிக்கப் பெரிய மணி ஒன்றைச் செய்கோனிலிருந்து (இன்றைய வியட்நாம் தலைநகர்) வன்தொண்டர் வரவழைத் திருந்தார். செய்கோனில் செய்யப்படும் மணி அதிக இனிமை யான ஒலி நயமுடையது. அம்மணியில் "சேக்கிழார் கோயில் மணி" என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அம்மணி இன்றும் திருக்கோயிலில் தெய்வ நாதத்தை எழுப்பி வருகிறது.

செட்டிநாட்டில் சிவன் கோயில்கள் பெருகுதல்

இந்நிலையில் காரைக்குடியை அடுத்த கோவிலூரில் கி.பி.1800-இல் சிவன் கோயில் கட்டும் பணி தொடங்கியது. அதனை அடுத்துக் காரைக்குடி நாகநாதபுரத்திலிருந்த பழைய சிவன்கோயில் கி.பி.1833-இல் இராய.நாகப்பச் செட்டியார் குடும்பத்தினரால் புதுப்பித்துக் கட்டப்பட்டது. சிவன் கோயிலும் பெருமாள் கோயிலுமாக இஃது அமைந்தது. அடுத்து கி.பி.1857-இல் இராயவரத்தில் வெ.மு.வேலன் செட்டியார், சிவன் கோயிலைத் தனி ஒருவராய்க் கட்டிக் குடமுழுக்குச் செய்தார். இந்தக் கால கட்டத்தில் காரைக்குடி நகரச் சிவன் கோயிலும் உருவாகிக் குடமுழுக்கு நடைபெற்றது. நகரச் சிவன் கோயிலின் சிவலிங்கம் தேவகோட்டை இரஸ்தாப் பகுதியிலுள்ள பழைய சிவன் கோயிலிலிருந்து கொண்டுவரப் பெற்றதாகும். இச்சிவன் கோயில் சிதைவு இன்றுமுளது. (மனோன்மணீய நூலின் ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் குரு) கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள் முயற்சியால் அரிமளத்தில் நகரச் சிவன் கோயில் கி.பி.1870-இல் உருவானது.

தனி உரிமைச் சிவன் கோயில்

தேவகோட்டை நகரத்தார்களிடமும், கண்டதேவி, இறகு சேரிச் சிவன் கோயில்களிலிருந்து தங்களுக்கு எனத் தனி உரிமையுள்ள சிவன் கோயிலைக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் திருவருளால் தோன்றியது. அதற்காகத் தக்க இடத்தைத் தேவகோட்டையில் ஆராயலாயினர். வன்தொண்டர், சேக்கிழார் கோயிலுக்குத் தெரிந்து எடுத்து

விலைக்கு வாங்கியிருந்த இடமே சிவன் கோயிலுக்குப் பொருத்தமானதாக இருந்தது. எனவே, நகரத்தார்கள் வன்தொண்டரிடம் சென்று உரிய தொகையைப் பெற்றுக் கொண்டு சிவன்கோயில் கட்ட இடத்தைத் தரவேண்டினர். சிவனடி மறவாச் சேக்கிழார்க்குரிய இடம் சிவபெருமானுக்கு ஆவதில் மகிழ்ந்த வன்தொண்டர் தொகை பெறாது இடத்தை வழங்கச் சில நிபந்தனைகளைச் சுட்டி இசைந்தார்.

வன்தொண்டர் விழைவு நிறைவேறல்

மனை இடத்தை வழங்கிய வன்தொண்டர் தன் குறிக்கோளையும் அவர்களிடம் வலியுறுத்தினார். சிவன் கோயிலில் சேக்கிழாருக்குத் தனிக்கருவறை அமைக்க வேண்டும், என்றும் அவருக்கு மூலத்தான மூர்த்திகளுக்குப் போல எல்லாக் காலத்திலும் பூசை நடக்க வேண்டும் என்றும் வன்தொண்டர் நகரத்தார்களிடம் கேட்டுக் கொண்டார். தேவகோட்டை நகரத்தார்கள் சிவசிந்தையாளரின் சொல்லுக்கு இசைந்து அவ்வாறே செய்யலாயினர்.

வாஸ்து வல்லமை

வன்தொண்டர் சேக்கிழார் கோயிலுக்குத் தேர்ந்தெடுத்த இடம் வாஸ்து சாஸ்திரப்படி சிவன் கோயிலுக்குரியதாக இருந்திருக்கிறது. திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட அறுபான்மும்மை நாயன்மார்களின் வரலாற்றைப் பாடிய சேக்கிழாரை வன்தொண்டர் சிவாம்சமாகக் கருதியே இவ்வாறு இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் போலும். வாஸ்து வளமை, சேக்கிழார் கோயிலைச் சிவன் கோயிலாக்கிச் சிறப்புச் சேர்த்துவிட்டது. இவ்வாறு சேக்கிழார் கோயில் உருவாக வேண்டிய இடத்தில் சிவன் கோயில் உருவாகியிருக்கிறது.

நகரத்தார் போற்றிய மதுரை

செட்டிநாட்டுச் சிவன் கோயில்களுக்கு எல்லாம் கி.பி.1857-இலிருந்து மதுரை மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கோயிலே முன் மாதிரியாகும். கி.பி.1857-க்குப் பின் செட்டிநாட்டில் எழுந்த சிவன் கோயில்களில்

அம்மை மீனாட்சி என்றும் அப்பன் சுந்தரேசுவரர் அல்லது சொக்கலிங்கம் என்றும் பெயர் பெற்றே விளங்குவர். அப்பெயர்களே தேவகோட்டையிலும் இடப்பட்டிருக்கின்றன. இக்கோயிலிலும் இறைவன், இறைவியர் கருவறைக் கோயிலமைப்பு மதுரைச் சிவன் கோயில் அமைப்பைப் போலவே விளங்குகிறது. இறைவன், இறைவியர் கருவறைகள் தனித்தனியாகக் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்திருக்கின்றன. மிகச் சீரும் சிறப்புமாகத் திருக்கோயில் எழுந்து தேவகோட்டை நகரத்தார்களின் திறமான நிர்வாகத்தில் நித்திய, நைமித்திக பூசைகள் செவ்வனே நிகழுகின்றன.

சிவலிங்கச் சிறப்பு

தேவகோட்டைக்குத் தெற்கேயுள்ள மணிகண்டி என்ற ஊரிலிருந்த சிவலிங்கம் தேவகோட்டைச் சிவன் கோயிலுக்கு கொண்டுவரப்பட்டது. இவ்வாறு கொண்டு வரப்பெற்ற சிவலிங்கம் கீழவீட்டார் காவலில் நெல்லுமண்டியில் வைக்கப்பட்டிருந்தது. சிவலிங்கப் பெருமானைத் தானியத்தைக் கொட்டி மறைத்து வைத்திருந்தனர். சிவாகம மரபுப்படி பெருமான் திருமேனி தான்யவாசத்தில் இருந்தது. இப்பெருமானே இன்று ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரராகத் தேவகோட்டையில் அருளாட்சி புரிகிறார்.

வழிபாட்டின் தொடக்கம்

இச் சிவலிங்க மூர்த்திக்குக் கீலக ஆண்டு கார்த்திகை மாதம் 22ஆம் நாள் முதலாக (6.12.1848) பூசை நடைபெற்று வருகிறது. மணிகண்டியிலிருந்து கொண்டு வரப்பெற்ற இலிங்கம் பல ஆண்டுகள் திருக்கோயிலில் பிரதிட்டை செய்யப் பெறாமலே இருந்தது எனத் தெரிகின்றது.

திருக்கோயில் கால் கோளிடல்

ஐந்து வீட்டார்களில் ஒருவரான மு.அண்ணாமலை செட்டியாரின் தவப்புதல்வரே வன்தொண்டர். இவர் வழங்கிய இடத்தில் ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்கள் 12-ஆம் நாள் (23.1.1874) அன்று புதிய கோயிலுக்குத் தச்சு

செய்யப்பட்டது. இங்குச் சேக்கிழார் திருவுருவம் அமைக்க, அவர் பிறந்தருளிய குன்றத்தூரிலிருந்து கல் கொண்டு வரப்பட்டது. சேக்கிழாரைத் தந்த குன்றத்தூர் அவர் உருவச் சிலைக்கும் கல்லைத் தந்ததாகும். தேவகோட்டை சுந்தரேசுவரர் ஸ்ரீ மீனாட்சி அம்மை பரிவார மூர்த்திகளுடனும் தேவ கோட்டை நகரச் சிவன் கோயில் உருவானது.

திருக்கோயிலுக்குத் தச்சு செய்யப்பெற்றுக் கோயில் கல் திருப்பணியாக நாளொரு பணியாக வளர்ந்தது. கல் திருப்பணிக்குக் காலம் கூடுதலாகச் செலவாகும். கல்லைக் கொண்டு வந்து வேண்டியவாறு செம்மையிட்டுக் கோயிலை உருவாக்கப் பதினான்கு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. திருக்கோயிலின் முதற் குடமுழுக்கு *4.6.1888* அன்று நிகழ்ந்திருக்கிறது.

இதுவரை நிகழ்ந்துள்ள திருக்குட முழுக்குகள் விவரம்

குடமுழுக்கு வரிசை எண்	ஆண்டு	மாதம் நாள்	ஆங்கில ஆண்டு
முதலாவது குடமுழுக்கு	சார்வதாரி	வைகாசி 24	4.6.1888
இரண்டாம் குடமுழுக்கு	ராக்சச	தை 25	7.2.1916
மூன்றாவது குடமுழுக்கு	குரோதன	ஆவணி 20	4.3.1925
நான்காவது குடமுழுக்கு	விஷு	தை 10	29.1.1942
ஐந்தாவது குடமுழுக்கு	ஏவிளம்பி	தை 13	26.1.1958
ஆறாவது குடமுழுக்கு	பிலவங்க	பங்குனி 5	18.3.1968
ஏழாவது குடமுழுக்கு	விபவ	தை 28	10.2.1989
எட்டாவது குடமுழுக்கு	சுபானு	பங்குனி 18	31.3.2004

நான்காவது குடமுழுக்குவிழா நிறைவேறிய பின் காரியக் காரர்கள் ஒருங்கு கூடி நன்கொடை அளித்தோர் விவரம், வரவு செலவுக் கணக்கு விவரம் ஆகியவற்றை வெளியிட்டனர். அதில் அஞ்ஞான்று கோயிலில் திருப்பணி நடந்து வரும் விவரமும் தரப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில்: "யுவ வருடம் தை மாதம் *13*-ஆம் தேதியில் கன்னி மூலைத் திருமதில் திருப்பணியை

ஆரம்பித்துப் பூர்த்தி செய்தும், நான்காவது குடமுழுக்குப் பணம் மிச்சத்திலிருந்து வடபுரம் திருமதிலையொட்டி வாகன மண்டபம் திருப்பணி செய்யவும், சுவாமி சந்நிதி, அம்மன் சந்நிதியின் முன்பு இருப்புயிருக்கும் அணியொட்டிக்கால் மண்டபம் வகையறா சாமான்களோடு பாக்கி வேண்டிய கல்வகையறாக்களைச் சேகரித்துத் திருப்பணியைப் பூர்த்தி செய்து இராசகோபுரம் கட்டியும், பிரம்மோத்சவத்தை நடத்தி வைப்பதற்கு வேண்டிய வாகனங்கள், தேர்கள் செய்தும் பிரம்மோத்சவத்தை நடத்தி வைக்க வேண்டிய மற்ற பொருட்களை உதவியும் நகரத்தார்கள் சிவ புண்ணியத்தைக் கைக்கொள்ள வேணுமாய் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரரை பிரார்த்திக்கிறோம்" என்ற வேண்டுகோள் இடம் பெற்றுள்ளது.

இந்த அறிக்கை கோயில் வரலாற்றையும் கோயிலை ஆக்க மக்களின் பங்களிப்பு எவ்வளவு இருந்தது என்பதையும் காட்டுகிறது.

இந்நான்காவது குடமுழுக்கு அறிக்கையில் இராசகோபுரம் கட்ட வேண்டும் என்று அறிக்கை சுட்டுகிறது. எனினும் அடுத்து நிகழ்ந்த ஐந்து, ஆறாவது குடமுழுக்கு விழாக்களில் இராசகோபுரம் கட்டப் பெறவில்லை.

கி.பி.1989-இல் நிகழ்ந்த ஏழாவது குடமுழுக்கின் போது தான் திருக்கோயிலுக்கு இரு இராசகோபுரங்கள் அமைக்கப் பெற்றன. சுவாமி கோயில் இராசகோபுரத் திருப்பணி நாமக்கல்லில் தொழில் செய்த தேவகோட்டை நகரத்தார்களின் பொது நிதியிலிருந்து நடைபெற்றது. அது போலத் தேவகோட்டை நகரத்தார்கள் பொதுவாக நிதி திரட்டி அம்பாள் சந்நித இராச கோபுரத்தை எழுப்பினர். திருக்கோயிலின் அனைத்துப் பகுதிகளும் செப்பனிடப்பட்டுத் திருக்குடமுழுக்குச் சிறப்பாக நிகழ்ந்தது.

தனிச்சிறப்புகள்

இச்சிவன் கோயிலில் எழுந்தருளிய ஸ்ரீபால தண்டாயுதபாணி சுவாமிக்குத் தலையில் குடுமி உள்ளது.

இப்பெருமான் மீது வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார். இத்துறவியார் போற்றியதற்குத் தக துன்மதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 24-ஆம் நாள் முதல் (7.11.1861) கந்த சஷ்டி விழாப் பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. இவ்வூர் மக்கள் சஷ்டி விரதத்தைப் பெருமளவில் மேற்கொண்டு பயன் பெறுகின்றனர்.

இத்திருக்கோயிலில் வனப்பு மிக்க கருவறையில் சேக்கிழார் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இத்தகைய தனிச் சிறப்பை வேறெங்கும் காணமுடியாது. இது சைவத்துக்கும், தமிழுக்கும் தனிப்பெருமை சேர்ப்பதாகும். இங்குள்ள தட்சிணா மூர்த்தியின் திருவுருவமும், மண்டபமும் கலைக்கவின் மிகுந்த கருவூலமாகும். மரத்தில் சிற்பவேலை செய்யுமாறு சிற்பி கல்லிலும் செய்திருக்கும் கைவண்ணம் கலை வண்ணம் கெழுமியது. தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கும் அடித்தளத்தைத் தாங்கி இருக்கும் இரண்டு சிங்கங்களின் வாயில் எடுக்க முடியாதபடி உருண்டைக் கற்கள் காணப்படுகின்றன. இத்தகைய சிற்பத் திறத்தை இலுப்பைக்குடி, மாத்தூர்க் கோயில்களிலும் காணமுடியும்.

இங்கு நிகழும், கந்த சஷ்டி விழா இந்தியப் புகழ் பெற்றது. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடிய சிறப்பால் முருகன் இப்பெருமை பெறுகிறார். நவராத்திரி விழா ஒன்பது நாட்கள் கொலு அலங்காரத்தோடு சீரும், சிறப்புமாக நிகழுகிறது. 1989-இல் தேர் செய்யப்பட்டு முதல் சித்திரைத் திருவிழா மிக நனி சிறப்பாக பிரம்மோத்சவமாகக் கொண்டாடப் பெறுகிறது.

சேக்கிழார் குரு பூசையும், சேக்கிழார் விழாவும்

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம் பூச நட்சத்திரத்தன்று சேக்கிழார் குரு பூசை சிறப்பாக நடைபெறுகிறது. அன்று காலை சேக்கிழாருக்கு அபிடேக ஆராதனைகள் நிகழும் பின் மாலையில் வெள்ளியானையில் சேக்கிழார் உற்சவ மூர்த்தியினை ஊர்வலமாகக் கொண்டு

வருவர். சேக்கிழார் விழா மாலையில் நடைபெறுகிறது. அப்போது இலக்கியச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. சேக்கிழார் விழாவினை, விழாக்குழுவின் தலைவர் உ.மு.சுப. லெ. அழகப்பச் செட்டியார் அவர்களும், செயலர், டாக்டர் சபா.அருணாசலம் அவர்களும், பொருளாளர் கவிஞர் சேது. அருணாசலம் அவர்களும் சிறப்பாக நடத்துகின்றனர்.

மரகத விநாயகர்

மரகத விநாயகர் அமர்ந்த கோலத்தினர். இவருக்கு நான்கு கைகள், வலதிரு கைகளுள் ஒன்றில் கொம்பும், மற்றதில் மழுவும், இடதிரு கைகளுள் ஒன்றில் மோதகமும், மற்றதில் பாசக்கயிறும் உள்ளன. தேவகோட்டையில் மட்டுமே மரகத விநாயகர் உள்ளது. நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வந்தபோது கொண்டுவந்த விநாயகர் பெயர் மரகத விநாயகர். இந்த மரகத விநாயகர் நகரத்தார்களின் குலதெய்வப் பெயர். தங்கள் வரலாற்றில் குறிக்கத்தக்க அந்தப் பெயரைத் தேவகோட்டை நகரத்தார்கள் வைத்திருப்பது மிகவும் போற்றத் தக்கது. மரகத விநாயகர் தேவகோட்டையில் மட்டுமே இருப்பது எங்குமில்லாச் சிறப்பு.

மேலும் இப்போது சுவாமி சன்னதி முன் உள்ள ரிசி கோபுரத்தையும், இராசகோபுரத்தையும் இணைத்து மண்டபம் கட்டும் திருப்பணி நடைபெற்று வருகின்றன. இதேபோல அம்மன் சன்னதி முன்னும் திருப்பணிகள் நடக்க இருக்கின்றன. நகரத்தார் இளைஞர்கள் அறுவர் சேர்ந்து 'அறுவர்குழு' என்ற அமைப்பை உண்டாக்கி கோயிலில் நந்தவனம் வைத்துப் பராமரிக்கின்றனர். நந்தவனத்தில் இருந்து தினமும் சுவாமிகளுக்கு மலர்கள் கொடுக்கப்படுகின்றன. இக்குழு ஆரம்பித்து ஐந்தாண்டுகள் ஆகின்றன. இவ்வாறு நகரத்தார்கள் பெரியவர் முதல் சிறியவர்வரை பல்வேறு நற்பணிகளைக் கோயிலை ஒட்டிச் செய்கின்றனர்.

- 4.6.1994 அன்று தி.கரு.ராம. சாமிநாதன் செட்டியார் அவர்கள் சுவாமி கோவிலின் முன் உள்ள கல் மண்டப திருப்பணியைத் தொடங்கினார்கள். அதை அவருடைய மகன் ராமநாதன் செட்டியார் அவர்கள் நிறைவு செய்தார்கள். 12.7.2002 அன்று சிவன் கோவிலுக்கு அர்ப்பணிக்கப் பெற்றது.

- அ.வீர.அ. செந்தில்நாதன் செட்டியார் அவருடைய மகன் அலமு வீடியோஸ் வெங்கடாசலம் அவர்கள் பழைய மகாமந்திர உபதேச கொட்டகையை அழகிய அலங்கார மண்டபமாக புதுப்பித்து கட்டி திருப்பணி செய்துள்ளார்கள். 4.3.2004 அன்று இது சிவன் கோவிலுக்கு அர்ப்பணிக்கப் பெற்றது.

- லோட்டஸ் அழ. வெங்கடாசலம் செட்டியார் அவர்களும், அவர்களது மகன் மோகன் அவர்களும் அண்ணாமலை செட்டியார் - உண்ணாமலை ஆச்சி நினைவாக மீனாட்சி அம்மன் சந்நிதி முன்பாக அழகிய கருங்கல் மண்டபத்தைக் கட்டி தந்துள்ளார்கள். இது 4.7.2004 அன்று சிவன்கோவிலுக்கு அர்ப்பணிக்கப் பெற்றது.

- இப்போது குடமுழுக்கை ஒட்டி அலுவலகக் கட்டிடம், வாகன மண்டபங்கள் வெளிப்புறத்தில் மடப்பள்ளி ஆகியவை புதிதாகக் கட்டப்பெற்றும் பழையவற்றை புதுப்பித்தும் திருப்பணி செய்துள்ளனர்.

வடபால்காளி கோயிலாக்கம்

சிவாலயத் திருப்பணி நிகழும்போது மண்ணில் இருந்து துர்க்கையம்மன் சிலை ஒன்று கிடைத்தது. அத்திருமேனி சிவன் கோயிலிலேயே பரிவார தெய்வமாக அமைத்து வணங்கப்பெற்றது. இக்கோயிலுக்கு வந்த திருச்சி சுவாமிகள், "இச்சிலை ஈண்டு இருப்பின் சிவன் கோயில் பிரபலமடையாது; எனவே துர்க்கையம்மனுக்குத் தனிக் கோயில் கட்டி வழிபடுக" என்றருளினார். அவர் குறிப்பிட்ட வண்ணமே சிவன் கோயிலுக்கு வடக்கே ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் கட்டப்பட்டு கி.பி.1958-இல் முதல் குடமுழுக்கு நிகழ்த்தப்பெற்றது. இது சிவன் கோயிலின் பரிவார ஆலயம். சிவன் கோயிலுக்கு வடபால் காளி கோயில் ஒன்று இருந்தால்தான் சிவன்கோயில் தெய்வ சாந்நித்தியம் முழுமையாக இருக்கும். இவ்விதிக் கேற்ப இப்பத்ரகாளி கோயில் அமைந்தது என்பதும் சிறப்பாகும்.

நிர்வாக அமைப்பும் நடைமுறையும்:

1. ஆதி காலத்தில் தேவகோட்டையின் தொன்மைக் குடிகளான,

   வீர.அள.வகையார்

   தி.வகையார்

   மெ.வகையார்

   ஐந்து வீட்டார் வகையார்

ஆகிய நான்கு திறத்தாரே திருக்கோயிலை நிர்வாகித்து வந்தனர்.

2. பின்,

   கரு.கி.க.சொ.சொர்ணநாதன் செட்டியார்,

   இராம.மெ.சு.மெ.மாணிக்கவாசகன் செட்டியார்,

   வ.ராம.கு.முத்துக்கருப்பன் செட்டியார்,

   பழ.சோம.சோமசுந்தரம் செட்டியார்.

ஆகிய நால்வரும் கோயிலை மேற்பார்த்து நடத்தினர்.

3. கரு.கி.க.சொ.சொர்ணநாதன் செட்டியார் 22.12.1920 முதல் 12.5.1950 முடிய முப்பது ஆண்டுகள் திருக்கோயிலை நிர்வகித்தார். கோட்டையம்மன் முளை மேடைக் கோயில், நகரப்பள்ளிக்கூடம் ஆகியனவும் இந்நிர்வாகத்திலேயே இருந்தன.

இப்பெரியார் தேவகோட்டை நகரத்தார்களிலுள்ள நாற்பது வகையினரையும் கி.பி.1950-இல் திருக்கோயில் மகா மந்திர உபதேச மண்டபத்தில் கூட்டிக் கோயில் தரும பரிபாலத்தை ஒப்புவித்தார். அன்று முதல் நாற்பது வகையாரும், கோயில் நிர்வாகத்தை ஏற்றுத் தங்களுக்குள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஐந்து வகையாரைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். பதினாறு ஆண்டுகள் கழித்து முதன் முதலில் காரியக்காரர்களாக இருந்த வகையினர்க்கே மீண்டும் பொறுப்பு வரும்.

தேர்வு செய்யப்பட்ட ஐவரில் ஒருவர் நிர்வாகப் பொறுப்பைக் கவனிப்பார்; கோயில் கணக்கு வழக்குகளை கண்டு கொள்வதும், குறிப்பேடுகளில் கையெழுத்துப் போடுவதும் இவர் பணி. மற்றொருவர் நகைகள் பராமரிப்பவராகச் செயல்படுவார். கருவூலத் திறவுகோல் இவர்பால் இருக்கும். இன்னொருவர் உள்துறை நிர்வாகத்தைக் கண்காணித்து நடத்துபவராவார். நித்தியப்படி பூசை, மின் விளக்குகள் போன்ற பணிகளை மேற்பார்த்து நிர்வகிப்பவர் இவர். எஞ்சிய இருவர், கோயிலுக்குரிமையான கிராம நிலங்களைப் பயிரிட்டுக் கண்டு முதல் செய்து வருமானம் வளர்ப்பவர்கள். புல்லூர், நாவலூர், வட்டாணம், மாடக்கோட்டை ஆகிய ஊர்களில் கோயிலுக்குரிய நிலங்கள் உள்ளன.

நித்தியம் ஆறுகால பூசையுடன், திருவிழாச் சிறப்புடன் தேவகோட்டையில் சிவன் கோயில் சைவமும், தமிழும் வளர்த்து வருகிறது.

கோயிலும் பூசை மரபுகளும்

திருக்கோயில்களில் நாள் தோறும் வழிபாடு நடைபெறுதல் வேண்டும். வழிபாடு ஒழுங்குற நிகழாவிட்டால் அதற்குக் கழுவாய் (பரிகாரம்) செய்தே பூசை நடைபெறும்; வழிபாடுகள் நிகழாத திருக்கோயிலில் தெய்வ சாந்நித்தியம் இருக்காது. எனவே கோயிலாக விளங்கி அடியார்க்கு அருள் பொழிய நித்திய பூசை வேண்டற்பாலது. திருக்கோயில் வழிபாட்டில் பூசை என்னும் வழிபாட்டை மூன்று வகைகளில் கொண்டாடுகின்றனர். அவையாவன;

1. நித்திய பூசை

இது நாள் தோறும் நிகழுவது. ஒரு நாளில் நான்கு காலமோ, ஆறு காலமோ கோயிலின் வசதிக்கேற்ப நடைபெறும். அந்தந்தக் கோயில் மரபுகளுக்கு அல்லது ஆகம மரபுகளுக்கு ஏற்பப் பூசை செய்ய வேண்டும்.

2. நைமித்திக பூசை

திருவிழாப்பூசையை நைமித்திக பூசை என்பர். அந்தந்தத் தலங்களுக்கு ஏற்பவும், வரலாறுகளுக்கேற்பவும் திருவிழா கோயில்களில் கொண்டாடப் பெறும். ஏதேனும் ஒரு மாதத்தில் கொடியேற்றி, காப்புக்கட்டிப் பத்து நாள்கள் பிரம்மோத்சவம் கொண்டாடப் பெறும்.

ஓராண்டில் வெவ்வேறு தெய்வங்களுக்கு எனத் தனித்தனியே திருவிழா எடுத்தலும் உண்டு.

3. காமிக பூசை

கோயிலைக் கொண்டாடி வணங்குவோர் தாங்கள் வேண்டிக் கொண்டு செய்வது. இது பயனை விரும்பிச் செய்யுங் கிரியை.

திருக்கோயிலில் நாள்தோறும் பூசை நிகழல் வேண்டும். திருவிழாக் காலத்தில் சிறப்புப் பூசை நிகழ்ந்தாலும், நித்திய பூசையும் காலந்தவறாமல் நடைபெறுதல் இன்றியமையாதது. திருக்கோயில் உண்டான காலத்திலிருந்து எவ்வகையான பூசை மரபுகள் அல்லது ஆகம மரபுகள் பின்பற்றப்பட்டனவோ, அந்த மரபே தொடர்ந்து என்றும் பின்பற்றப்பட வேண்டும். ஒர் ஆகமத்திலிருந்து இன்னொரு ஆகம மரபை மாற்றலாகாது. பல்வேறு குறுநில மன்னர்கள் ஆண்டகாலத்தில் ஆறுகால பூசை நடைபெற்ற கோயில்கள் இன்றோ போதிய பொருள் வருவாயின்மையால் இரண்டு காலம் அல்லது ஒரு காலப் பூசையே நிகழுகின்றன என்பது இங்குக் குறிக்கத்தக்கது.

தேவகோட்டையும் சிவநெறியும்

தேவகோட்டை சைவமும், தமிழும் தழைத்தினிது ஓங்கிய திருப்பணிச் செல்வார்கள் வாழும் செட்டிநாட்டு ஊர். செல்வம் மலிந்த சைவப் பற்று மிக்க ஊர். சிவாகமங்களைப் பதிப்பித்தும், மொழி பெயர்த்தும் திருக்கோயில் நெறிகளை வளர்த்த ஊர். இவ்வூர்க்கு அணியூட்டும் அழகுக் கோயிலாகத் தேவகோட்டை நகரச் சிவன் கோயில் திகழ்கிறது. ஸ்ரீ மீனாட்சி சமேத ஸ்ரீ சுந்தரேசுவரர் திருக்கோயில் என்னும் நகரச் சிவன் கோயிலில் நாள்தோறும் ஆறு கால பூசைகள் நிகழ்கின்றன. அவையாவன:

ஆறுகாலப் பூசை நிகழ்ச்சிகளின் அட்டவணை

வ. எண்	பூசை	நேரம்	நைவேத்தியம்
1.	திருவனந்தல்	காலை 5.30லிருந்து 6.00க்குள்	பச்சைப்பால்
2.	விழாப்பூசை	8.00மணி	பருப்புப் பொங்கல்
3.	காலசந்தி	8.30 மணி	சுத்தான்னம்
4.	உச்சிக்காலம்	12.00லிருந்து 1.00க்குள்	புளியோதரை

5.	சாயரட்சை	5.00 மணி	சர்க்கரைப் பொங்கல்
6.	அர்த்தசாமம்	7.30லிருந்து 8.00க்குள்	சம்பாசாதம் அப்பம், காய்ச்சிய பால்

இத்திட்டப்படி இச்சிவன் கோயிலில் ஆறு காலப் பூசைகள் ஒழுங்காகக் குறித்த நேரத்தில் தவறாது நிகழுகின்றன.

1. திருவனந்தல்

திருவனந்தல் என்பது காலைப்பூசை. திருக்கோயிலில் நாளின் தொடக்கத்தில் நிகழும் முதற் பூசை. இதனைத் தமிழ் லெக்ஸிகன் 'கடவுளின் திருப்பள்ளியெழுச்சிப் பூசனை" என்று சுட்டுகிறது. முதலில் பைரவரிடம் திருக்கோயில் சாவியைப் பெற்று, அம்மன் சன்னதியில் முதல் பூசை நிகழும். பின் விநாயகர், சுப்பிரமணியர், பள்ளியறை இறைவன், இறைவியர்க்குப் பூசை நிகழும். பூசை நிகழ்த்தி இறைவன் இறைவியைத் துயில் எழுப்புவர். பின் காய்ச்சப் பெறாத பாலினால் நிவேதனம் செய்யப்பெற்றுத் தீபாராதனை நடைபெறும். அடுத்து சிவபெருமானுடைய உற்சவ மூர்த்தியைச் சிவிகையில் எழுந்தருளச் செய்து திருக்கோயில் கருவறைக்குக் கொண்டு செல்வர். பின்னர் திருஞான சம்பந்தருக்குக் காய்ச்சப் பெறாத ஆவின்பால் நைவேத்தியம் செய்யப்பெற்று, வழிபட வந்த அடியார்க்குத் திருமுன் வழங்கப்பெறும்.

2.விழாப்பூசை

காலை 8.00 மணிக்கு விழாப்பூசை நடைபெறும். இப்பூசைக் காலத்தில் மூலக் கருவறைக்கு வெளியேயுள்ள இரட்டைப் பிள்ளையாருக்கு முதற்பூசை நிகழும். பின் சிவபெருமான் மீனாட்சியம்மை, சோமாஸ்கந்தர், நடராசர் ஆகியோருக்குப் பஞ்ச உபசார பூசை நிகழும். அலங்கார தீபம், தூபம், தீபம் போன்ற ஐந்து வகையான உபசாரங்களுடன் நடைபெறுவதால் இது பஞ்ச உபசாரம் எனப்பெறும். இப்பூசையில் பருப்புப் பொங்கல் நிவேதனம் செய்யப் பெறுகிறது.

3. காலசந்தி

(ஒரு நாளின் ஆறு பாகங்களுள் இரண்டிரண்டு பாகங்கள் கூடுஞ் சந்திக் காலத்தில் கோயில்களில் செய்யப்படும் பூசை சந்திப்பூசை யாகும்.) காலையில் நிகழும் பூசை ஆதலின் இதனைக் காலசந்தி என்றழைப்பர். இப்பூசையில் முதற்கண் வழிப்படப் பெறுபவர் சூரிய பகவான் ஆவார். பகற் பொழுதின் தொடக்கம் இவரிடத்தில் தொடங்குதலின் உலகியலை ஒட்டி இஃது அமைந்திருக்கிறது. பின் திருக்கோயிலில் உள்ள எல்லாச் சுவாமிகளுக்கும் பூசை நடைபெறும். ஆனால் சிவனடியாரான சண்டேசுவரப் பெருமானுக்கு மட்டும் பூசை கிடையாது. திருக்கோயில் காவல் பொறுப்பாளரான பைரவருக்குப் பூசை உண்டு. சிவபெருமானுக்குச் சுத்தான்னம் நிவேதனம் செய்யப்படுகிறது. இப்பூசை காலை 8.30 மணியளவில் நடைபெறும்.

4. உச்சிக்காலம்

திருக்கோயிலின் மத்தியான பூசை உச்சிக்காலம். சுவாமி, அம்பாள், நடராசன், சோமாஸ்கந்தர் ஆகியோருக்குப் பூசையும் தீப, தூப ஆராதனையும் நிகழும். சுவாமி, அம்பாளுக்கு எல்லாவிதமான அபிடேகங்களும் நிகழும். இவ்வேளையில் புளியோதரையும், குளித்தளிகையும் (குழம்பு, இரசம், தயிர், கறிவகைகள்) நைவேத்தியமாகச் சுவாமிக்குப் படைக்கப்படும். எல்லா உணவு வகைகளையும் கிண்ணங்களில் நிரப்புவர். அன்னத்தையும் தட்டுத் தட்டாக இரு தட்டுகள் அமைத்துச் சொருகுசட்டியில் வைத்திருப்பர். இதனை அப்படியே நைவேத்தியம் செய்வர். இவ்வாறு ஒரு திருக்கோயிலில் இரண்டோ, மூன்றோ குளித்தளிகைகள் நிறுவப்பட்டிருக்கும். பின்னர் இதனை அடியார்கட்கு உண்ணக் கொடுப்பர். சண்டேசுவரர்க்குப் பூசை நிகழ்த்தி நடை சாத்தப்படும்.

5. சாயரட்சை

கோயிலில் நிகழும் மாலைப் பூசை சாயரட்சை, மாலையில் ஐந்து மணி அளவில் இப்பூசை நிகழும். சுவாமிக்கும், அம்பாளுக்கும் மட்டும் திருமஞ்சனம் செய்யப் பெறும். பின்னர் எல்லாத் தெய்வங்களுக்கும் பூசை நிகழும்.

சாயரட்சையில் பைரவருக்கும், சண்டேசுவரருக்கும் பூசை இல்லை. இப்பூசையில் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யப் பெற்று அடியார்கட்கு வழங்கப்பெறும்.

6. அர்த்த சாமம்

திருக்கோயிலின் நடுநிசிப் பூசையை அர்த்தசாமம் என்றும், அர்த்தசாமப் பூசை என்றும் உரைப்பர். நடுநசிப் பூசை என்றாலும் இப்பூசை எல்லாக் கோயில்களிலும் இரவு ஏழரை மணிக்கு மேல் நடைபெறுகிறது. இப்பூசையில் இறைவன், இறைவிக்குப் பாலபிடேகம் சிறப்பாக நிகழும். பின் சம்பா சாதமும், அப்பமும் நிவேதனம் செய்யப்படுகிறது. இறைவனைச் சிவிகையில் ஏற்றிப் பள்ளியறைக்குக் கொண்டு செல்வர். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் இறைவன் வெள்ளிப் பல்லக்கில் எழுந்தருளி வருவார். வெள்ளிக்கிழமை தோறும் வயிரவருக்கு உகந்த வடைமாலை சார்த்தப்பட்டு அடியார்களுக்கு வழங்கப்பெறும். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையன்றும் இறைவன் - இறைவிக்குப் பள்ளியறையில் மது வர்க்கம் நைவேத்தியம் செய்யப்பெறும். (தேங்காயினைப் பூப் 'பூவாகத் திருகி வெல்லப் பாகில் போட்டு ஏலக்காய், பேரீச்சம்பழம், தேன் போன்றவற்றைப் போட்டு வதக்கிக் கிண்டப்படுவதே மதுவர்க்கம்) இதன் பின் காய்ச்சிய பால் நிவேதனம் செய்யப்படும். பின் இவை வந்திருப்போருக்கு வழங்கப்பெறும். ஓதுவார் இறைவியின் ஊடலைத் தீர்க்கத் திருவாசகத்திலுள்ள 'பொன்னூசல்' பாடலை இசையோடு பாடுவார். அர்த்தசாமப் பூசையுடன் திருக்கோயிலின் நித்திய பூசை நிறைவு பெறும்.

திருக்கோயிலில் நிகழும் அர்த்த சாமப் பூசை மிகுந்த சிறப்புடையது. திருமணம் ஆகாத மகளிர் தொடர்ந்து பதினொரு வெள்ளிக் கிழமைகளில் அர்த்த சாமப் பூசையில் மாலை வாங்கி இறைவன், இறைவிக்குச் சார்த்தி வழிபடல் வேண்டும். மீண்டும் மறுநாள் காலையில் திருவனந்தல் பூசைக்கு வந்து மாலையைப் பெற்றுச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதால் திருமணம் விரைவில் நடைபெறும் என்ற நம்பிக்கை உண்டு.

விழவுறும் திருநகர்

'விழைவு' என்பது விருப்பம் என்று பொருள் தரும். விரும்பிச் செய்வதாலேயே இது விழாவென்று போற்றப்படுகிறது. விழா இல்லாத திருக்கோயிலுக்குப் பெருமை இல்லை. ஆலயங்களில் 12 அல்லது 10 நாள்கள் மிகச் சிறப்பாகப் பூசைகள் நிகழ்த்தி அங்குள்ள திருவுருவங்களைப் பல்வேறு ஊர்திகளில் எழுந்தருளச் செய்து ஊரெல்லாம் உலா வருகின்ற ஊர்வலம் திருவிழா என்றும், மகோத்சவம் என்றும் போற்றப் பெறுகிறது. தேவகோட்டை நகரச் சிவன்கோயிலில் எல்லா மாதங்களிலும் திருவிழா சிறப்புற நடைபெறுகிறது. திங்கள் அடிப்படையில் விழா நடைபெறுதல் விளக்கப் பெறுகிறது.

சிறப்பான சித்திரைத் திருவிழா

ஆண்டுப் பிறப்பு சித்திரைத் திங்களின் முதல்நாள். அன்று மாலை தேவகோட்டை பஞ்சாங்கக்காரர் இரவு அந்த ஆண்டு வெளிவந்த பஞ்சாங்கத்தைப் படித்துப் பலன் கூறுவார். நாள்காட்டி, பஞ்சாங்கம், வானொலி போன்றவை இல்லாத பழைய காலத்தில் பஞ்சாங்கத்தை எழுதிப் படித்துக் காட்டும் மரபு பண்டு போல இன்றும் நடந்து வருகிறது. அந்த ஆண்டின் பலன்களை விளைவுகளை அறிந்து மக்கள் வாழ்வதற்கு இது துணை செய்யும். திருக்கோயிலில் பஞ் சாங்கக் காரருக்கு மரியாதை செய்யப்பெறும்.

சித்திரைத் திருவிழா பத்து நாள் திருநாள்: அட்டவணை:

வரிசை நாள்	காலை	மாலை	பிற குறிப்புகள்
முதல் நாள்	கொடி யேற்றம் (6.20.7.20)	காப்புக் கட்டல் (7.30.8.00)	காலையில் தினம் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு உண்டு.
இரண்டாம் நாள்	மஞ்சம் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு. திருமுலைப் பால் உற்சவம்	சுவாமி-யானை வாகனம் அம்மன் - அன்ன வாகனம்	மாலையிலும் பஞ் சமூர்த்திகள் புறப்பாடு உண்டு.

மூன்றாம் நாள்	மஞ்சம்	சுவாமி - பூத வாகனம் அம்மன் - சிம்ம வாகனம்	
நான்காம் நாள்	மஞ்சள்	சுவாமி - வெள்ளி இரதம் அம்மன் - மயில் வாகனம்	
ஐந்தாம் நாள்	காலை 11.00 மணியளவில் அம்மன் தபசுக் காட்சி	7.00 மணிக்குத் திருக்கல்யாணம் 'தெருவடைச்சான்'	ஸ்ரீஅரங்க நாதப் பெருமாள் வருகை
ஆறாம் நாள்	மஞ்சள்	சுவாமி - அம்மன் ரிடப வாகனக் காட்சி	
ஏழாம் நாள்	மஞ்சள்	சுவாமி - கைலாச வாகனம் அம்மன் வெள்ளி இரதம்	
எட்டாம் நாள்	சிதம்பர சேவை (நடராசர் தரிசனம்) நடராசர் புறப்பாடு - ஊடல் உற்சவம்	5.00 மணிக்குப் பாரி வேட்டை அர்ச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கி உபதேசித்தல்	
ஒன்பதாம் நாள்	தேருக்கு எழுந்தருளல் 9.00 - 9.30	4.30 மணியளவில் தேர் வடம்பிடித்தல்	
பத்தாம் நாள் பௌர்ணமித் திதி	தீர்த்தவாரி	பஞ்சமூர்த்திகள் ஊர்வலம் (ஐம்பெருங் கடவுளர்) ரிடப வாகனம்	
பதினொராம் நாள்	விடையாற்றி உற்சவம் சண்டிகேசுவரர் உற்சவம்.		

தேவகோட்டைத் திருக்கோயிலில் பத்துநாள்கள் நடைபெறும் இத்திருவிழா பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மகோத்சவம் நடைபெறாத கோயில்கள் கோயில்களாகப் போற்றப் பெறாது. உயிர்கள்

பாசத்தினால் கட்டுண்டு பிறந்து, இறந்து உழல்கின்றன. அவற்றைக் காப்பாற்றத்தான் குருவாக வந்து சமய விசேட நிருவாண தீட்சைகளினாலே பாசங்களை நீக்கிச் சிவமாக்கி இறைவன் அருளுகின்றான். தீட்சைகளினால் அருள்பெற இயலாத தாவர சங்கமங்களுக்கும், தீட்சைபெற்று சமய ஆசாரங்களை விட்டவர்கட்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாகங்களிலே சரியாதார்க்கும் சிவன் திருவடிப்பேறு பெற நான்கு காரியமும் பொருந்திய சாம்பவம் என்ற தீட்சையே மகோத்சவம் ஆகும். இதுவே பிருமோத்சவம் எனப்படுகிறது.

ஒரு நாள் முதல் ஐந்து நாள்கள் வரை நிகழும் திருவிழாவில் கொடியேற்றம் கிடையாது. ஒன்று, இரண்டு நாள்கள் நடைபெறும் உற்சவத்திற்குச் சைவம் என்றும், மூன்று அல்லது நான்கு நாள்கள் நடைபெறும் உற்சவத்திற்குக் கௌனம் என்றும், ஐந்து நாள்கள் நடைபெறும் உற்சவத்திற்குப் பௌதீகம் என்றும் பெயர், பதினெட்டு காலப்பலிதானத்துடன் கூடிய நவதின துவசாரோகண தீர்த்தாந்த மகோத்சவத்திற்குச் சௌக்கியம் என்று பெயர். பெரும்பாலும் இதனையே விநாயகர் உற்சவத்திற்குப் பின் கொடியேற்றம் முதல் தீர்த்தம், அவரோகனம், பந்தம், பதி என்று பதினொரு நாள்கள் செய்வர். அஸ்திர, யாக பலிதானத்தினை முக்கியமாக வைத்தே நவதின துவசாரோகண தீர்த்தாந்த கல்யாண மகோத்சவம் என்று போற்றப்படுகிறது. இந்த விழா இங்கு சீரும், சிறப்புமாகப் போற்றப்பட்டு நடைபெறுகிறது. சீர்காழி, சிதம்பரம், திருவேட்களம், மதுரை ஆகிய திருத்தல சிறப்பு உற்சவங்களைப் போல இங்கும் உற்சவம் நிகழுகிறது. சம்பந் தருக்கு முதன்மை கொடுத்துத் திருமுலைப் பால் உற்சவம் நடைபெறுகிறது; தேவகோட்டைச் சிவன் கோயிலில் சம்பந்தருக்குத் தனிச் சிறப்புத் தரப்படுகிறது. இன்னொரு சமய குரவரான திருநாவுக்கரசருக்குச் சித்திரைச் சதயமன்று குருபூசை விழா நடக்கிறது.

வைகாசி விசாகத் திருநாள்

வைகாசி விசாகத் தன்று முருகப்பெருமான் வெள்ளணி நாளாகிய அத்தினத்தில் சுப்பிரமணியருக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறும். அந்நாளில் அறுவர் நின்று ஆறு

முகங்களுக்கும் தனித்தனியே அர்ச்சனை சொல்ல அறுவர் நின்று பத்திரமிட சண்முகார்ச்சனை சிறப்புற நடைபெறும். வைகாசி மூலத்தன்று திருஞான சம்பந்தருக்குக் குரு பூசை நிகழும்.

இத்திருக்கோயிலுக்கே தனிச் சிறப்புடைய சேக்கிழார் விழா இத்திங்களில் பூசநட்சத்திரத்தன்று நடை பெறுகிறது. ஒவ்வொரு திங்களிலும் பூசநட்சத்திரத் தன்று சேக்கிழாருக்கு விழாவும் சிறப்பு வழிபாடும் நிகழ்கிறது.

ஆனித் திருவிழா

ஆனித்திங்கள் உத்தரத்தன்று நடராசப் பெருமானுக்கு அபிடேகம் நடக்கும். மக்களுக்கு ஓர் ஆண்டாக விளங்குவது தேவர்களுக்கு ஒரு நாளாம். அதனால் ஆண்டுக்கு ஆறு முறை நடராசருக்கு அபிடேகம் நிகழும். மக நட்சத்திரத்தன்று மாணிக்கவாசகர் குரு பூசை நிகழுகிறது.

அம்மையைச் சிறப்பிக்கும் ஆடி

செட்டிநாட்டில் கோவிலூர் ஆடிப்பூரம் உற்சவம் சிறப்பு மிக்கது. அதுபோல ஆடிப்பூரம் இங்கும் சிறப்புறக் கொண்டாடப் படுகிறது. இதற்கெனத் தனியே ஆடிப்பூர அம்மன் என்று உற்சவ மூர்த்தியும் உண்டு. அன்று மாலை அம்மன் ரிடபவாகனத்தில் எழுந்தருளி வலம் வருவாள். ஆடிச்சுவாதியன்று சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை சிறப்பாக நடைபெறுகிறது.

தேவகோட்டை நகரக் கோயிலைச் சார்ந்த கோட்டையம்மன் கோயிலில் இம்மாதத்தில்தான் பதின்மூன்று நாள் விழா நிகழும். இது தேவகோட்டை கிராம தேவதையின் வழிபாட்டோடு தொடர்புடையது. ஆடிமாதம் முதல் திங்கள் மேடை அமைத்துக் கரகம் அமைப்பர். இன்றும் சிற்றூர்களில் கரகம் வைத்து வழிபடும் வழிபாடு மந்தையம்மன் (மன்றம் > மந்து > மந்தை = ஊர்ப்பொதுவிடம்) கோயிலில் காணப்படுகிறது. மூன்று செவ்வாய்க்கிழமை தொடர்ந்து பொங்கல் வைப்பர். இந்தப் பொங்கலைச் செவ்வாய்ப் பொங்கல் என்பர். எல்லாக் கிராமங்களிலும் இந்தச் சிறுதெய்வ வழிபாடு இன்றும் நடைபெறுகிறது.

பொங்கல் வைப்பது போன்ற சிறப்புகள் கோட்டையம்மன் கோயிலில் நிகழும். அவ்விழாவின் தொடர்ச்சியாகப் பத்திரகாளியம்மன் கோயிலில் உள்ள துர்க்கையம்மன், மூன்றாவது செவ்வாயன்றும், நான்காவது செவ்வாயன்றும் சிம்மவாகனத்தில் எழுந்தருளுவாள்.

பொங்கல் வைத்து வழிபடும் இந்த அம்மன் கோயில் தேவ கோட்டையின் பழமையான கோயிலாகும். ஆடிப்பூரமும், ஆடித்திங்களும் தாய்த்தெய்வமாகிய அம்மைக்குத் தனிச் சிறப்புத் தருவதால் இத்திருவிழாக்கள் சிறப்புற நடைபெறுகின்றன.

பிட்டுத் திருநாள்

மதுரைக்கும் மாணிக்கவாசகருக்கும் மாட்சிமை சேர்ப்பது பிட்டுத்திருவிழா. இவ்விழா திருவிளையாடல் புராணத்தில் இந்நாளில் பிட்டுக்கு மண் சுமந்த பகுதியில் கூறப்படுகிறது. ஐம்பெருங் கடவுளரை உலாக்கொண்டு வருவர். பாண்டிய மன்னனாகச் சுந்தரரை அலங்கரித்து எழுந்தருளச் செய்கின்றனர். தம்பிரான் தோழர் ஆதலாலும் அவர் முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆதலாலும் அவர் மன்னர் மனையில் வளர்ந்ததாலும் சுந்தரரே சமய குரவர் நால்வரில் பாண்டியனாக வேடம் சூட்டப் பெறுகிறார். இறைவன் அடியார்க்கு எளியனாய் வந்த நிலையை இந்நிகழ்ச்சி காட்டுகிறது. இது ஆவணி மூலத்தன்று நிகழுகிறது.

அம்மையைப் போற்றும் விழா

புரட்டாசித் திங்களில் நவராத்திரி விழாக் கொண்டாடும் சிறப்பு விசயநகர ஆட்சிகாலத்தில் தென்னாட்டில் பரவியது. இசுலாமியத்தை எதிர்த்து இந்து சமய எழுச்சியை உண்டாக்குதற்கு இந்த விழா துணை நின்றது. இவ்விழா ஒன்பதுநாள் விழா. வைணவச் சார்வும், இராமாயணத்தாக்கமும் நிறைந்த புரட்டாசித் திங்களில் இக்கோயிலில் ஒன்பது நாளும் திருவிளையாடல் புராண அடிப்படையிலேயே இறைவிக்குச் சாத்துப்படி (அலங்காரம்) நடைபெறுகிறது. அந்நிலையிலும் சாக்தத்தின் தாக்கமாக முதல் மூன்று நாள்கள் இலக்குமி தொடர்பாகவும், அடுத்த மூன்று நாள்கள் சரசுவதி தொடர்பாகவும், இறுதி மூன்று

நாள்கள் அசுரரை அழித்த அன்னை துர்க்காபரமேசுவரி தொடர்பாகவும் அலங்கரிப்பர்.

அலங்காரக் காட்சி அட்டவணை

வ. எண்	நாள்	அலங்காரக் காட்சி
1	முதல் நாள்	காப்புக்கட்டுதல்
2	இரண்டாம் நாள்	அம்பிகை திரு அவதாரம். தீயில் தேவி பிறப்பது போன்ற சோடனை
3	மூன்றாம் நாள்	இராசாங்க அவதாரம். பாண்டியன் அம்பாளுக்குச் செங்கோல் வழங்குவது போல் காட்சி. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் இதனைப் பாடுவர்.
4	நான்காம் நாள்	திக் விசயம், அன்னை கையில் வில்லும், அம்பும். சுவாமி கையில் சூலம்.
5	ஐந்தாம் நாள்	திருக்கல்யாணம்; திருமால் தாரை வார்த்துக் கொடுத்தல்.
6	ஆறாம் நாள்	உக்கிர பாண்டியன் திருஅவதாரம். தங்கத்தால் ஆன குழந்தையைத் தொட்டிலில் கிடத்திச் சங்கில் பாலூற்றி அம்மை புகட்டுவாள். சுவாமி குழந்தைக்குக் கிலுகிலுப்பை வைத்து விளையாட்டுக் காட்டுவார்.
7	ஏழாம் நாள்	பிட்டுக்கு மண் சுமத்தல், சுவாமி படுத்திருக்கத் தங்க மண் வெட்டி, கூடை அருகில் இருக்கும். அம்மையும் அழகு செய்யப்பட்டுத் தனியே இருப்பாள். அருகே பிட்டுவாணிச்சியாகிய வந்தி சுவாமிக்குப் பிட்டு ஊட்டுவாள். பாண்டியன் யானையில் வந்து சாட்டையால் அடிப்பது போல் அலங்காரம்.

8	எட்டாம் நாள்	அன்னை மகிடாசுரனைக் கொன்றவளாகக் காட்சி தருவாள். பதினாறு கைகளுடன் கையிலே சூலம் விளங்க நிற்பாள்.
9	ஒன்பதாம் நாள் சரசுவதி பூசை	சரசுவதி இறைவனுக்குக்குப்பூசை செய்தல். கலைமகள் வெண்பட்டு உடுத்தி இடக்கையில் நூலும் மற்றதில் மலர் கூடையுமாக, மற்றொரு இடக்கையில் மலரும், மற்றொரு கையில் உருத்திராக்கமுமாகக் காணப்படுவாள்.

இவ்வாறு ஒன்பது நாள் பூசையும் மிகச்சிறந்த முறையில் திருவிளையாடல் காட்சிகளாக அலங்கரிக்கப்பட்டு விளங்கும். செட்டிநாட்டில் வேறு எந்த ஊரிலும் இத்தகைய வரன் முறையான அலங்காரத்தை ஆண்டு தோறும் விடாது செய்வது இல்லை. வெளியூர்களில் இருந்து இவ்விழா. அலங்காரத்தைக் காண மக்கள் திரளாக வருகின்றனர்.

சரசுவதி பூசை முடிந்த மறுதினம் விசயதசமி. அன்றைய தினம், தேவகோட்டையில் உள்ள அனைத்துக் கோயில்களில் இருந்தும் சுவாமிகள் வந்து நகரச் சிவன் கோயில் வாயிலெதிரே நின்று அம்பு போடுவர்.

இங்கு அம்பு போட வருகின்ற கடவுளர் விவரம்

வ. எண்	ஊர்	கோயில்	அம்பு போட வரும் சுவாமி
1	தேவகோட்டை	நகரச்சிவன் கோயில்	சுப்ரமணியர்
2	தேவகோட்டை	செல்லப்பச் செட்டியார் சிவன் கோயில்	சுப்ரமணியர்
3	இறகு சேரி	சிவன்கோயில்	சுப்ரமணியர்
4	தேவகோட்டை	பெருமாள் கோயில்	பெருமாள்
5	தேவகோட்டை	பெருமாள் கோயில்	பெருமாள்
6	தேவகோட்டை	கிருஷ்ணன் கோயில்	கிருஷ்ணன்

இவ்வாறு எல்லாக் கோயில்களில் இருந்தும் சுவாமிகள் வந்து சேர்ந்ததும் ஒரே வரிசையில் நின்று அம்பு போடும் வைபவம் நிகழும். காரைக்குடியில், கோவிலூர், காரைக்குடிச் சிவன் கோயில், காரைக்குடி நாகநாதபுரம் சிவன் கோயில், கொப்புடையம்மன் கோயில் ஆகிய நான்கு கோயில் தெய்வங்களும் மகார் நோன்புப் பொட்டலுக்கு வந்து ஒரே வரிசையில் ஒன்றாக நின்று அம்புபோடும். விழா நிகழ்ச்சியை ஒரே இடத்தில் மக்கள் காண்பதற்கு இது மிக நல்ல வாய்ப்பாக அமைகிறது.

தீர்த்தம் கொடுத்தல்

ஐப்பசி முதல் நாள் இறைவன் துலாக்காவேரி தீர்த்த மாடுதல் நடைபெறும். இத்தீர்த்த விழாவில் தேவகோட்டைச் சிவன்கோயில் மூன்று, திண்ணன் செட்டிப் பிள்ளையார் கோயில், சிலம்பணிவிநாயகர் கோயில், இராமர், கிருஷ்ணர் போன்ற கோயில் உற்சவமூர்த்திகள் வந்து தீர்த்தம் கொடுப்பர். ஐப்பசி அமாவாசை அன்று தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் உள்ள உற்சவரும், திண்ணன் செட்டிப் பிள்ளையாரும் தீர்த்தம் கொடுக்க வருவர். தீர்த்தம் கொடுக்கின்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இங்குள்ள மணிமுத்தாற்றிலேயே நடைபெறும்.

கந்தர் சஷ்டி

திசைவிளங்கும் புகழ்மிக்க தேவகோட்டைக்குச் சிறப்புத் தருவது கந்தர்சஷ்டி உற்சவமே ஆகும். கந்தர்சஷ்டி உற்சவம் துர்மதி ஆண்டு ஐப்பசி மாதம் 24-ஆம் (7.11.1861) தேதியில் தொடங்கி இன்று வரை சிறப்பாக நடைபெறுகிறது. இஃது எட்டு நாள் விழாவாகும். இந்நாள்களில் முருகனுக்கு இலட்ச்சார்ச்சனை நடைபெறும். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி பாடிய பிள்ளைத்தமிழ் இம்முருகனுக்குத் தமிழ்ச் சுவையைத் தந்துள்ளது. அமாவாசை அன்று கந்தர்சஷ்டி விழாவிற்குக் காப்புக்கட்டுவர். நாள் தோறும், காலை விழாவும், மாலை விழாவும் நிகழும். இரண்டாம் நாளில் இருந்து விநாயகரும், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும் சாதாரண அலங்காரத்தில் உலா

வருவர். காப்புக் கட்டிய நாளன்று விநாயகர் பெருச்சாளி வாகனத்திலும், வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணியர் கேடகத்திலும் எழுந்தருளுவர்.

கந்தர் சஷ்டி உத்சவ அட்டவணை

வ.எண்	இறைவன்	வாகனம்	பிறகுறிப்புகள்
1	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	கேடகம்	சுவாமிபுறப்பாடு எல்லா நாள்களிலும் இரவிலேயே நடைபெறும்.
2	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	யானை	
3	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	தங்கக்குதிரை	
4	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	கைலாச வாகனம்	
5	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	ரிடப வாகனம்	
6	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	வெள்ளி இரதம்	சூரசம்காரம்
7	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	மயில்வாகனம்	
8	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்	புட்ப பல்லக்கு	
9	வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்		விடையாற்றி உற்சவம்

சஷ்டி எட்டு நாள்களும் காலைப் பதினொரு மணிக்கு விநாயகருக்கும், முருகனுக்கும் அபிடேகம் நிகழும். பின் அலங்காரம் நிகழும். இக்காலத்தில் நகரத்தார்களும், பிறரும் ஆறுநாள்கள் சஷ்டி நோன்பு இருந்து முருகப்பெருமானை வழிபடுகின்றனர். இது தேவகோட்டைக்குத் திருமகளையும், தெய்வ வலிமையையும் கொண்டு வந்து தருகிறது. ஐப்பசித் திங்கள் பௌர்ணமி அன்று திருவண்ணாமலையில் அன்னாபிடேகம் நடைபெறும். அதனைப் பின்பற்றிச் செட்டிநாட்டில் அன்னாபிடேக விழா மிகச் சிறப்பாகச் சிவன் கோயில்களில் கொண்டாடப் பெறுகிறது.

சுத்தான்னத்தை வடித்துச் சூடாற்றி சிவலிங்கத்தைச் சுற்றித் தூய வெள்ளாடை விரித்து அதில் அன்னாபிடேகம் செய்வர். நறுக்கப்படாத புடலை போற்ற கறிகளும் வேகவைக்கப்பட்டுச் சார்த்தப்பட்டிருக்கும். அன்னாபிடேகம் முடிந்த பின் அன்னம் அடியார்கட்கு வழங்கப் பெறும்.

ஐப்பசித்திங்கள் இறுதிநாள் 'முடவன் முழுக்கு' என்பர். இதனைக் கடைமுழுக்கு என்றும் சொல்வர். ஐப்பசித் திங்கள் முதல் நாள் ஆற்றுக்கு வந்த எல்லாச் சுவாமிகளும் கடை முழுக்கிலும் ஆற்றுக்கு வரும். பாடல்பெற்ற மயிலாடு துறையில் இது சீரிய விழா, இங்கும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கார்த்திகைத் திருநாள்கள்

கார்த்திகை மாதம் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் சிவபெருமானுக்குச் சிறப்பான அபிடேகங்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஆயிரத்தெட்டு சங்குகள் அபிடேகிக்கப்படும். மண்டபத்தில் நெல்லைப் பரப்பி அதனைச் சிவலிங்க வடிவில் செய்துவைப்பர். சங்குகளில், பால்போன்ற அபிடேகத்திற்குரிய பொருட்கள் நிரப்பப்பட்டு ருத்ரம், யமகம் போன்ற சிவமந்திரங்களைப் பாராயணம் செய்து அதனை இறைவ னுக்கு அபிடேகம் செய்வர். இன்று பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நிகழும்.

கார்த்திகைத் திங்களின் தனிச் சிறப்புவிழா திருக்கார்த்திகை. அந்நாளில் சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் புறப்பட்டு உலா வருவார். கோயிலுக்கு முன் சொக்கப்பனை கொளுத்தப்படும். சிவபெருமான் அடியையும், முடியையும் தேடிக் கண்டு பிடிக்கத் திருமாலும், நான்முகனும் பெரிதும் முயன்றனர். சிவபெருமானோ அக்னி சுவாலையாக நின்றார். அக்காட்சியை நினைவுபடுத்துவதே சொக்கப்பனை. சிறிய வட்டமாகப் பனை ஓலையை வெட்டி வட்டமாகக்கட்டி நடுவில் ஒரு கட்டை மரத்தைக் கட்டியிருப்பர். மண் அகலை ஏற்றி அந்தக்கம்பத்தின் மீது வைப்பர். பின் அந்த குடிசைக்கு நெருப்பு வைப்பர். இதுதான் சொக்கப்பனை, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நகரத்தார் பிள்ளைகள் கார்த்திகைப் புதுமை செய்து சொக்கப்பனைக் கொளுத்துவர்.

மனங்கவர் மார்கழியும், தித்திக்கும் திருவாதிரையும்

மாதங்களில் சிறப்புடையது மார்கழி. மார்கழித் திங்களில் திருப்பள்ளி எழுச்சி தனிச் சிறப்புடைய பூசையாகும். திருப்பள்ளியெழுச்சியையும் சேர்த்து மார்கழி மாதத்தில் ஏழுகாலப் பூசை நிகழும்.

அவையாவன: திருவனந்தல், திருப்பள்ளியெழுச்சி, விழாப்பூசை, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை அர்த்தசாமம்.

இங்கு நகரத்தார் பெண்கள் அனைவரும் பொருள் தொகுத்து அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிறப்பான வழிபாடு செய்வர். இது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இம்மாத்தில் கொண்டாடப் பெறும் மற்றொரு விழா வைக்கத்தட்டமி விழா. பௌர்ணமியை அடுத்துவரும் அட்டமி அன்று ஐம்பெருங்கடவுளர் நகரை வலம் வருவர். உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் இறைவன் படியளத்தல் போல இறைவன் அழகு செய்யப் படுகிறார். இறைவன் படியளக்கத் தங்கத்தால் ஆன மரக்கா கையில் விளங்கும். மார்கழி மாதம் திருவாதிரை உற்சவம் பத்துநாள் விழாவாக நிகழ்ந்தாலும் கொடியேற்றம் இல்லை. இது பக்தோற்சவமாகவே நிகழுகின்றது. முதல் நாள் காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் மாணிக்கவாசகர் கேடகத்தில் புறப்பட்டு உலா வருவார். பத்துநாள்களும் திருவெம்பாவை பாடி காலை, மாலை இருவேளைகளிலும் அர்ச்சிப்பர். திருவாதிரைக்கு முன் தினம் மாலையில் நடராசருக்கு அலங்காரம் செய்து அலங்கார மண்டபத்தில் வைத்து அருச்சனைகள் நடைபெறும். மறுநாள் காலை ஐந்து மணியளவில் 'ஆருத்ரா' தரிசனம் நடைபெறுகிறது. சந்தனாபிடேகம் நிகழ்ந்தபின் சுவாமி புறப்பாடு நிகழும். இது பத்தாம் நாளாகும். இத்தினத்தில் சுவாமி புறப்பாட்டின் போது மாணிக்கவாசகர் வணங்கியபடி முன்செல்லச் சிவபெருமான் சிவகாமி அம்மையுடன் பின் செல்வார்.

தமிழர் திருநாளாம் தைத்திங்கள்

தை முதல் நாள் தமிழர் திருநாள். அம்மன் சன்னதிமுன் இருபானைகளில் சர்க்கரைப் பொங்கல் வைக்கப் பெறும்.

அவள் உலகூட்டும் அன்னையாதலின் சிவபிரான் முன்னோ, பிறதெய்வங்கள் முன்னோ பொங்கல் வைப்பதில்லை.

தை வெள்ளி தோறும் அம்மைக்குச் சிறப்பு அலங்காரமும், வழிபாடும் நிகழ்கிறது. தை வெள்ளிக்கிழமை ஒன்றில் மகளிர் அனைவரும் ஒருங்கு கூடித் திருவிளக்குப் பூசை சிவாச்சாரியார் தலைமையில் நிகழ்கிறது. மகளிர் மந்திரங்களைத் தமிழிலேயே சொல்வது குறிப்பிடத்தக்கது. தை மாதத்தில் இறுதியாக வரும் வெள்ளியன்று அம்பாளுக்கு இலட்சதீபம் திருநாள் நடைபெறுகிறது. அந்நாளில் அம்மை காளை வாகனத்தில் எழுந்தருளி அடியார்க்குக் காட்சி தருவாள்.

கனுப் பொங்கல்

தைத்திங்களில் உலகப் பெண்களைப் போலவே அம்மையும் கனுப் பொங்கல் வைப்பதாக விழா நடை பெறல் சிறப்புடையது. நகரத்தார்கள் இங்குக் கனுப் பொங்கலைச் சிறப்புற நிகழ்த்துகின்றனர். அம்பாள் நன்கு அலங்கரிக்கப்பட்டு, இடத்தில் குடத்துடன், காளை வாகனத்தில் காட்சி தருவாள். பின் வெளியே உள்ள திருக்குளத்தின் கரையில் அம்பாளை வைத்து, சாஸ்திர தேவரைக் குளத்திற்கு எடுத்துச் சென்று அபிடேக ஆராதனைகள் நிகழ்த்துவர். மிகச்சிறப்புற நடைபெறும் இவ்விழா செட்டிநாட்டில் வேறு எந்த ஊரிலும் இல்லை.

மாசி மகம்

மாசி மாதம் மகத்தன்று நவரத்தின வேல் ஒன்றினை எடுத்துத் திருநீற்றுப் பையில் வைப்பர். அதன் முனை மட்டும் வெளியே தெரியும். நகரத்தாரில் ஒருவயதான பெரியவர் அவ்வேலை பயபக்தியோடு சுமந்து கொண்டு வீதிவலம் வருவார். பின் நகரப் பள்ளிக்கூடத்திற்குக் கொணர்ந்து பன்னீரால் நீராட்டுவர். அபிடேக அலங்காரம் முடிந்ததும் துறவியர்க்குக் காவி ஆடை கொடுக்கப்படும். பின் ஏழைகட்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

மகாசிவராத்திரி

மாசி மாதத்தின் சிறந்த விழா சிவராத்திரி. இரவு நான்கு காலங்கள் சுவாமி அம்பாளுக்கு சிறப்பான அபிடேகங்கள் நிகழுகின்றன. ஒவ்வொரு அபிடேகத்திலும் பால், பழம், கரும்புச்சாறு, நூறு இளநீர் ஆகியன அபிடேகிக்கப்படும். மாலை ஆறுமணி, இரவு பத்து மணி, நள்ளிரவு ஒருமணி, காலை ஐந்துமணி என அபிடேகம் நிகழும். அன்றைய தினம் இரவு கோயில் நடைசார்த்தல் இல்லை.

உத்திரத்திருவிழா

இங்கு பங்குனியில் நிகழும் ஒரேவிழா உத்திரத்திரு விழா. மாலையில் சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் எழுந்தருளி உலாவருவார். இவையன்றி ஒவ்வொரு மாதமும் ஆண்டு முழுமையும் நிகழும் சிறப்பு நிகழ்ச்சிகளும் உண்டு. அவை அடுத்து அட்டவணையில் விளக்கப்படுகின்றன.

வ. எண்	விழா	மாதம் வரும் எண்ணிக்கை	இறைவன்	பிற குறிப்புகள்
1.	சதுர்த்தி	இரண்டு	விநாயகர்	சுவாமி கோயிலுள் வலம் வரும்
2.	சஷ்டி	இரண்டு	சுப்ரமணியர்	சிறப்பு அபிடேக அர்ச்சனைகள் நிகழும்.
3.	பிரதோஷம்		சுவாமி, அம்பாள்	அபிடேகம், சுவாமி அம்பாள் புறப்பாடு.
4.	கார்த்திகை	ஒன்று	சுப்பிரமணியர்	கேடக வாகனத்தில் சுப்பிரமணியர் வலம் வரல்
5.	பௌர்ணமி	ஒன்று	அம்பாள்	விசேட அபிடேக, ஆராதனை
6.	அமாவாசை	இரண்டு	சிவபெருமான்	சுவாமிக்குச் சிறப்பு அபிடேக ஆராதனை


இங்ஙனம் திருக்கோயிலின் விழா அறாத் தேவ கோட்டையாக விளங்குகிறது. செந்தமிழும், சிவ பக்தியும் தழைத்த தேவகோட்டையில் வள்ளல் மனம் படைத்த நகரத்தார் பெருமக்களால் கோயிலுக்கு வேண்டிய வாகனங்களும் செலவுக்குத் தேவையான பொருட்களும் நிறைய வருகின்றன. அதனால் வெள்ளி வாகனங்களும், தங்கக் கருவிகளும் திருக்கோயிலில் நிறைந்து உள்ளன. முப்போதும் திருமேனி தீண்டும் சிவாச்சாரியார்கள் ஆகம மரபு பிறழாது பய பக்தியோடு தெள்ளத் தெளிவாய் மந்திரங்களையும், வேத கோஷங்களையும் எழுப்பிச் சிவபக்தியை வளர்த்து வருகின்றனர். சைவம் தழைக்கத் திருக்கோயில் திருவிழாக்கள் பெருங்கருவியாக, உறுதுணையாகத் திகழ்கின்றன. மக்களாய்ப் பிறந்தால் தேவகோட்டைத் திருவிழாக்களைக் கண்டு களித்து, சிவ பக்தி உண்டு பேரின்பம் எய்த வேண்டும்.

கோயில் அமைப்பு

கோயில் கருவறைப் பகுதி கருவறை, அருத்த மண்டபம், முன்மண்டபம் என மூன்று பகுதிகளை உடையது. கருவறையில் சுவாமி சுந்தரேசப் பெருமான் அருளாட்சி செய்கிறார். முன்மண்டபத்தில் இரட்டைப் பிள்ளையார், நந்தி, பலிபீடம், கண்ணாடி, உற்சவ மூர்த்திகள் ஆகியன உள்ளன. கருவறைப் புறப்பகுதியில் நர்த்தன விநாயகர், தட்சிணா மூர்த்தி, அடிமுடிகாட்டாநாதர், பிரும்மா, விட்ணுதுர்க்கை போன்ற தேவகோட்டங்கள் உள்ளன. மற்றும், நால்வர் சன்னதி, அறுபத்துமூவர் மண்டபம், கன்னி மூலை சரசுவதி, சோமா ஸ்கந்தர் சன்னதி, மரகத விநாயகர், விசுவநாதர் விசாலாட்சி, ஸ்ரீபாலதண்டாயுதபாணி சன்னதி, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் சன்னதி, மகாலெட்சுமி சன்னதி, சண்டேசுவரர் சன்னதி, சேக்கிழார் கருவறை, நடராசர் சன்னதி, காலபைரவர் சன்னதி, சந்திரன், சனீசுவரன், அதிகார நந்தி, சூரியன் போன்றன சுவாமி சன்னதியில் உள்ளன.

அம்மன் சன்னதியில் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியன உள்ளன. கருவறையில் மீனாட்சி அம்மன் அருள் புரிகிறாள். இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி போன்ற தேவகோட்டங்களும், சண்டேசுவரி கருவறையும்,

பள்ளியறையும், நவக்கிரங்களும் உள்ளன. ரிசிகோபுரத்திற்கு இருபுறத்திலும் விநாயகர், சுப்பிரமணியர் சன்னதிகள் உள்ளன. சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி ஆகியவற்றிற்கு இடையே அலங்கார மண்டபம் உள்ளது. சுவாமி அம்மன் கோயில்களுக்கு தனித்தனி இராச கோபுரங்கள் அமைக்கப்பட்டு கோயில் அழகுற அமைந்துள்ளது.




1. சுவாமி சன்னதி இராசகோபுரம்
2. காரியக்காரரர் அலுவலகம்
3. யாகசாலை
4. ரிசி கோபுரம்
5. நால்வர் சன்னதி
6. அறுபத்து மூவர் மண்டபம்
7. கன்மூலை சரசுவதி
8. சோமாஸ் கந்தர் சன்னதி

9. மரகத விநாயகர் சன்னதி
10. விசுவநாதர் விசாலாட்சி சன்னதி
11. ஸ்ரீபால தண்டாயுதபாணி சன்னதி
12. வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் சன்னதி
13. மகாலெட்சுமி சன்னதி
14. தட்சிணாமூர்த்தி
15. அடிமுடிகாட்டாநாதர்
16. பிரும்மா
17. விட்ணு துர்க்கை
18. சண்டேசுவரர் சன்னதி
19. சேக்கிழார் சன்னதி
20. நடராசர் சன்னதி
21. பைரவர் சன்னதி
22. முன்மண்டபம்
23. அர்த்த மண்டபம்
24. சுவாமி கருவறை
25. அம்மன் இராசகோபுரம்
26. அலங்கார மண்டபம்
27. பாகசாலை
28. விநாயகர் சன்னதி
29. சுப்பிரமணியர் சன்னதி
30. ரிசிகோபுரம்
31. நவக்கிரகங்கள்
32. பள்ளியறை
33. இச்சா சக்தி
34. ஞான சக்தி
35. கிரியா சக்தி
36. சண்டேசுவரி கருவறை
37. அர்த்தமண்டபம்
38. அம்மன் கருவறை
39. கன்னிமூலை சித்தி விநாயகர்
40. வில்வமரத்து விநாயகர்

ஆன்மீக நூல்கள்

சிவ வழிபாடு
அர்ச்சனைக்குரிய 108 போற்றிகள்
சிவபுராணச் சிந்தனைகள்
பஞ்ச புராணத் திரட்டு
பாசுரப்படி ஸ்ரீமத் ராமாயணம்
கண்ணன் ஒரு சூத்ரதாரி
பகவத் கீதை முத்துக்கள்
திருக்குறள் முத்துக்கள்
தமிழர் திருமணம்
சிவாலய வழிபாடு
கந்தர் அனுபூதி(100 பாடல்கள்)
விரதங்கள்
ஷீரடி சாய்பாபா வழிபாடு
அறுபத்து மூன்று நாயன்மார் கதைகள்
துயர் துடைக்கும் மந்திரங்கள் (பேரா.அ.ச.ஞா.உரை)
ஸ்ரீ அனுமன் சாலீஸா
அருளும் பொருளும் தரும் அஷ்டலஷ்மி
ஸ்ரீ நாராயணீயம்(100 தசகங்கள்)
மனையடி சாஸ்திரம்
பதினெண் சித்தர்கள் வரலாறு
தமிழ் மருந்துகள்
கடுக்காய்
திரிகடுகம் எனும் சுக்கு மிளகு திப்பிலி
மகாத்மா காந்தியடிகள்–வாழ்க்கைக் குறிப்புகள்
மகாகவி பாரதியார்–வாழ்க்கைக் குறிப்புகள்
பாவேந்தர் பாரதிதாசன்–வாழ்க்கைக் குறிப்புகள்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

முல்லை
பதிப்பகம்
323/10,கதிரவன்காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை – 40
போன் : 2616 1196 / 9840358301 e -mail : mullaipathipagam@yahoo.com



தேவகோட்டை நகரச் சிவன் கோவில் இராச கோபுரங்கள்